## தலைப்பு – 325 இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2022 ஜூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றுகை கூற்று

நிதிக் கூற்றுக்களிற்கு உரிய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரியின் இறுதி கட்டுநிதிப் பொழிப்பு (SA - 70) படி கட்டுநிதிப் பெறுமதி ரூபா 289,636,521 தொகையாக காணப்பட்ட போதிலும் (ACA – 3) படிவத்தின் படி ரூபா 288,782,628 தொகை காட்டப்பட்டிருந்தது. அதன்படி, கட்டுநிதி பெறுவனவுகள் மற்றும் கட்டுநிதி தீர்த்தல்கள் ரூபா 853,893 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | முரண்பாடுகளை சரி செய்வதற்காக ஆலோசனை வழங்கப்பட்டது. | திறைசேரி இறுதிப் பொழிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகளின் அடிப்படையில் கட்டுநிதிக் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி இறுதி பரீட்சை மீதியில் (7002/409/21) ஏனைய மூலவளங்களின் மூலம் கட்டுநிதி பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 12,858,521 தொகை எனினும் (ACA – 3) படிவத்தில் காட்டப்பட்டிருந்தது ரூபா 12,004,628 தொகையாகும். அதன்படி, ஏனைய மூல வளங்களின் மூலம் கட்டுநிதிப் பெறுவனவுகள் ரூபா 853,893 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | முரண்பாடுகள் எதிர் காலத்தில் ஏற்படாதவாறு அறிவுரை வழங்கப்பட்டது. | கட்டுநிதி பெறுவனவுகள் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும் என. |

**2 நிதி மீளாய்வு**

----------------

**2.1 ஏற்பாடுகளை பயன்படுத்துல்**

----------------------------------

நிதிக் கூற்றுக்களிற்கு உரிய மீண்டுவரும் செலவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------------------------------- | -------------------------------------------- | -------------------------------- |
| (அ) | 2020 திசெம்பர் 23 திகதிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 07/2020 இல் பந்தி 02 இற்கு இணங்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் பந்தி 05 இன் உப பிரிவு 5.1 இன் படி வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த மீண்டுவரும் மற்றும் மூலதன ஏற்பாடுகளின் வரையறையை மிகைக்காதவாறு செலவு முகாமைத்துவம் மேற்கொள்ளல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பொன்றென காட்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது கட்டிடங்கள் மற்றும் நிர்மாண வேலைகளுக்கான செலவு விடய இலக்கம் 325-1-1-0-2104 கீழ் வழங்கப்பட்டிருந்த ரூபா 10,000,000 தொகைக்கான ஆரம்ப ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக 4 உப கருத்திட்டங்களுக்காக குறை நிரப்பு மதிப்பீட்டின் மூலம் ரூபா 75,000,000 இற்கான ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த ஏற்பாடுகளுக்கு மிகையாக மீண்டும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. | சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் 50 இற்கு இணங்க செலவு மதிப்பீடுகள் முடிந்தளவு சரியாக தயாரித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பொன்றாக இருந்த போதிலும் 09 செலவு விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 16,303,000 தொகைக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தன. | எதிர்வுகூறல் மேற்கொள்ளாத கருமங்களுக்காக நிதி ஏற்பாட்டு மாற்றங்கள் பயன்படுத்தப்பட்டது. | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டிற்கான நிதி செயலாற்றுகைக் கூற்றில் அடங்கியுள்ள ஏனைய மீண்டுவரும் செலவுகளின் கீழ் உட்படுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 8,000 இற்கான அரச கரும மொழிக் கொள்கையை செயற்படுத்தும் செலவு ஏனைய பண்டங்கள் மற்றும் சேவைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | குறித்துக்கொண்டேன். | செலவுகள் குறிப்பிட்ட செலவு விடயங்களின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | அறுதியாக இனங் காணக்கூடியதாக இருந்த ரூபா 331,587 தொகைக்கான மீண்டுவரும் தன்மையை உடைய செலவுகள் மூலதனச் செலவுகளின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், செலவுகள் மேற்கொள்ளும் போது ரூபா 2,937,617 தொகைக்கான மூலதனச் செலவுகள், செலவின் தன்மையின் படி குறிப்பிட்ட செலவு விடயங்களின் கீழ் வகைப்படுத்தியிருக்கவில்லை. | பாதீட்டு உத்தியோகத்தருடன் கூட்டிணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டது. | - மேற்படி - |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அனுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான திறைசேரி ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று (SA – 92 ) இன் படி வருட இறுதியில் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 3,134,972 தொகை எனினும், குறிப்பு (iii) படிவத்தின் படி அப் பெறுமதி ரூபா 741,042 தொகையாக இருந்தது. அதன்படி, ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் | எதிர் காலத்தில் பொறுப்புக்களை உரிய முறையில் பதிவு செய்வதற்காக குறித்துக்கொண்டேன். | பொறுப்புக்களை உரிய முறையில் பதிவு செய்யப்பட வேண்டும். |

ரூபா 2,393,930 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமில்லாத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| அவதானிப்பு | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு** | | **இணக்கமின்மை** | | |
| 2009 இன் 41 இலக்க கடலோரப் பாதுகாப்புத் திணைக்களச் சட்டம் | | | | |
| பகுதி II பந்தி 4(எ) | (அ) | கடலோர மற்றும் கடல்சார் சுற்றாடலை பாதுகாப்பதற்காக உதவி செய்தல் கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கருமம் மற்றும் செய்பணி ஒன்றாக இருந்த போதிலும் அதனை உரிய மற்றும் உயிர்ப்புடன் செயற்படுத்துவது குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. | பாதுகாப்பு அமைச்சுச் செயலாளருக்கு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அறிக்கை சமர்ப்பித்தல் மாத்திரம் போதியளவானதல்ல. உயிர்புள்ள பங்களிப்பு தேவைப்படுகின்றது என. |
| பகுதி III பந்தி 11 | (ஆ) | ஆலோசனை சபையொன்று நிருவப்பட வேணடியிருந்த போதிலும் இதுவரை அந்த சபை நிருவப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆலோசனை சபையொன்று நிருவப்படல் இதுவரை நிறைவேற்றி இருக்கவில்லை எனவும் கடிதத்தின் மூலம அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் உடனடியாக ஆலோசனை சபையொன்றறு நிருவுவதற்கு செயற்பட வேண்டும் என |
| பந்தி 12 | (இ) | ஆலோசனை சபையினால் திணைக்களத்தின் வருடாந்த அலுவல்கள் தொடர்பான மீளாய்வொன்று மேற்கொண்டு அமைச்சருக்கு அது தொடர்பாக விரிவான | ஆலோசனை சபையொன்று நிருவப்பட்டு இருக்காமையால் அறிக்கையொன்று சமர்ப்பிக்க முடியாது. | குறிப்பிட்ட அறிக்கை குறிப்பிட்ட காலப் பகுதியுள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என. |

அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இதுவரை அந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் ரோஹன நிறுவனத்தில் உயர் பயிற்சி மற்றும் நிருவாக கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 30.09 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்ட பின்னர் 2017 ஜூலை 22 திகதி முதல் கைவிடப்பட்டிருந்த செயற்திட்டத்தின் வேலைகள் 2021 ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2022 ஏப்ரல் வரை இந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த மொத்தச் செலவு ரூபா 104.8 மில்லியன் தொகையாக இருந்தது. திணைக்களத்திற்கு மிகவும் அத்தியவசியமான செயற்திட்டம் ஒன்றான இந்த பயிற்சி மற்றும் நிருவாக கட்டிடத்தை விரைவாக பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | இந்த ஆண்டின் போது அத்தியவசிய நிர்மாண வேலைகள் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிர்மாண வேலைகள் விரைவாக செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

**3.2 பெறுகைகள்**

**--------------**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1(உ) இற்கு இணங்க பிரதான பெறுகைத் திட்டம் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்தில் திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் ரோஹன நிறுவனத்தின் உயர் பயிற்சி மற்றும் நிருவாக கட்டிடம் நிர்மாணித்தல் தொடர்பாக பிரதான பெறுகைத் திட்டத்தில் தகவல்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1(அ) இற்கு இணங்க, அனைத்து தொடர்புடைய செலவுகள் உட்பட மொத்தக் கிரய மதிப்பீடு பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மேற்கூறிய பெறுகை தொடர்பாக அதன்படி, நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நாளதுவரை ஆக்கல் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி தேவையான நாளதுவரை ஆக்கல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என. |
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2 (அ) இற்கு இணங்க, பெறுகை ஆரம்பிக்கும் சந்தர்ப்பம் முதல் பூர்த்தி செய்யும் வரை ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளின் கட்டங்களும் கால ஒழுங்கின்படி விவரிக்கும் பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.6 இற்கு இணங்க, விலைகூறல் திறப்பது தொடர்பாக நிதிசார் தகவல்கள் மற்றும் ஒவ்வொரு விலைகூறல் தொடர்பான தகவல்கள் (முறைப்பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட முத்திரை பொரித்த விலைகூறல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா, மாற்று | எதிர் காலத்தில் எதிர் பார்க்கும் விதத்தில் அறிக்கை ஒன்று பேணிச் செல்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | விலைகூறல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவா ஆகிய) குறிப்பிட்ட படிவத்தில் அறிக்கை இடப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | குறித்தொதுக்கிய களஞ்சிய முறைமை ஒன்றின் கீழ் தேவையான பண்ட எண்ணிக்கையை இனங் கண்டு அதன் படி பெறுகை செயற்பாடுகளை செயற்படுத்தி உரிய வழங்கல்களின் மூலம் தேவையான எண்ணிக்கைகளில் அவ்வவ் சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்வதற்கு பதிலாக அடிக்கடி ஒவ்வொரு விடயம் அல்லது ஒரே விடயத்தை பகுதிகளாக கொள்வனவு செய்வதற்கு கோவைகள் திறக்கப்பட்டிருந்த காரணத்தினால் பாரிய எண்ணிக்கையில் கொள்வனவு செய்யும் போது கிடைக்கக் கூடிய கழிவு, குறைந்த விலை ஒன்று மற்றும் தரமான பண்டங்கள் கொள்வனவு செய்தல் ஆகிய நலன்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் உரிய அலுவல்கள் உரிய முறையில் எதிர்வு கூறுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்குரிய 1159.92 பர்சஸ் (1.91825 ஹெக்டயார்) காணிகள் உரிய முறையில் உரித்தாக்காமல் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. | உரிய முறையில் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய முறையில் உரித்தாக்கும் அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| (ஆ) | செயற்படு நிலையில் காணப்படாத ரூபா 163.2 மில்லியன் பெறுமதியான 10 கப்பல்கள்/ படகுகள் தொடர்பாக எடுக்க | விரைவாக செயற்படு நிலைமைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்படு நிலைமைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. |

வேண்டிய தொடர் நடவடிக்கை விரைவுபடுத்துதல் எடுத்தல் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டியிருந்ததென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**3.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடலோரப் பாதுகாப்பு ‘வருண’ நிறுவனத்தில் காணப்படும் உணவுக் களஞ்சியத்தில் உலர் உணவுப் பண்டங்கள் சுகாதார ரீதியான பாதுகாப்புடன் களஞ்சியப்படுத்துவதற்கு முடியாமல் இருந்தன. எலிகள் மற்றும் பல்வேறு பூச்சுக்களினால் உலர் உணவுகள் அழிக்கப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டன. அதன் காரணமாக முகாமில் கடமையாற்றும் அனைத்து கடலோரப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சுகாதார பாதுகாப்பு தொடர்பான கடுமையான சிக்கல் நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்ததுடன், உணவுப் பண்டங்கள் அழிவடைவதினால் இருப்புக் கணக்குகள் உரிய முறையில் பேணிச் செல்வதில் சிக்கல் நிலைமையொன்றுக்கு முகம் கொடுப்பதற்கு நேரிட்டடிருந்து. | எதிர் காலத்தில் நிருவுவதற்கு தீர்மானித்திருந்த முன்மொழியப்பட்ட கட்டிடத்தில் உணவுக் களஞ்சியத்திற்காக ஒதுக்கப்படல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | உணவுக் களஞ்சியம் ஒன்று நிருவுவதற்காக தேவையான நடவடிக்கைகள் விரைவாக நடடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

**3.5 சுற்றாடல் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சட்ட விரோத நடவடிக்கை தொடர்பாக கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகள், உபகரணங்கள் மற்றும் கருவிகள் மீன் பிடித் துறைமுகங்களில் தடுத்து வைத்த போது திடீர் நீர் நிரம்பல் நேரிட்டால் எண்ணெய் கசிவு ஏற்படுவதற்கு இடமிருந்ததெனவும், | நீதி மன்றத்தின் விஷேட அனுமதியுடன் துறைமுகத்தின் தரைப்பகுதி ஒன்றில் உரிய முறையில் நிறுத்தப்படுகின்றது. | கைப்படற்றப்பட்ட படகுகள், உபகரணங்கள் மற்றும் கருவிகள் தரைபகுதி ஒன்றில் உரிய முறையில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

மழை நீர் படகுகளில் சேகரமாகுவதன் மூலம் டெங்கு நுளம்புகள் பரவுவதின் அதிகரிப்பு ஒன்று அதன் மூலம் பிரதிகூலமான சுற்றாடல் சார் சுகாதாரம் சார் மற்றும் பொருளாதார ரீதியான தாக்கங்கள் கூடிய எண்ணிக்கைக்கு முகங்கொடுப்பதற்கு நேரிடுகின்றமையால் அந்த ஆபத்து நிலைமையை குறைத்துக் கொள்ளவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்திற்குச் சொந்தமாக நாடு பூராகவும் 17 துணைத் தொகுதிகள் அமைக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்விற்குத் தேவையான மனிதவளம் போதியளவு பயன்படுத்தப்பட்டிருக்காமையால் விரிவான கணக்காய்வொன்று மேற்கொள்வதற்குரிய சந்தர்ப்பம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. | இணங்குகின்றேன். | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக போதியளவு மனித வளத்தை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட மட்ட பதவியாகிய கணக்காளர் பதவி பதில் கடமை நியமனமாக தொடர்ந்தும் காணப்படுகின்றது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட மட்ட பதவி தற்போது வெற்றிடமாக காணப்படவில்லை. | பதில் கடமை நியமனம் ஒன்றாக தொடர்ந்தும் நியமனம் செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட மட்ட பதவி நிரந்தப் பதவி ஒன்றாக ஆக்க வேண்டும் என. |